2003 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு பகுதியில் கருப்புக் கல் மெருகூட்டும் தொழிற்சாலை அமைக்க கீழ்க்கண்ட அடிப்படை வசதிகள் அமையப் பெற வேண்டும்:—

அமைக்க உத்தேசிக்கும் தொழிற்சாலையைச் சுற்றி, 50 அல்லது 60 கிலோமீட்டர் வரம்பிற்குள் தரமுள்ள ஏற்றுமதிக்கு உகந்த பல்வேறு வகையான கிரானைட் பாறைகள் அமையப் பெற்றிருக்க வேண்டும்; அப்பகுதியில் எப்போதும் அதிக அளவு தண்ணீர் கிடைக்கப்பெற வேண்டும்; சரியான போக்குவரத்து வசதி கொண்ட ரயில் நிலையத்தையும் தேசிய நெடுஞ்சாலையையும் இணைக்கின்ற வகையில் தொழிற்சாலை அமையப் பெற வேண்டும்; மேலும், ஒரு பகுதியில் கிரானைட் மெருகூட்டும் தொழிற்சாலை அமைப்பதற்குமுன் கிரானைட்டைச் சார்ந்த பொருள்களுக்கான சர்வதேசத் தேவையினை நன்கு ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டும். ஆகவே இதையெல்லாம் கருத்தில் கொண்டுதான் தொழிற்சாலை அமைக்க முடியும். தற்சமயம் அந்தத் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 168, திரு. ஆர். சாமி, மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்.

TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

168—

துணை மின் நிலையம்

***19521—திரு. ஆர். சாமி:**

மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, கொட்டாம்பட்டியில் 110 மெகாவாட் திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைக்கும் பணி நடப்பாண்டில் துவக்கப்படுமா?

முற்பகல் 10-40

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

[2003 ஏப்ரல் 3

மேலூர் தொகுதி, கொட்டாம்பட்டியில் 110/11 கே.வி. மின் நிலையம் அமைப்பதற்கு நடப்பாண்டிலே பணிகள் துவங்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இருண்டு கிடந்த தமிழகத்தை ;வெளிச்சப் பாதையில் கொண்டு வந்து, நல்லாட்சி நடத்திக்கொண்டிருக்கிற டாக்டர் புரட்சித் தலைவி அம்மா ஆட்சிக் காலத்தில் என்னுடைய தொகுதியான மேலூர் தொகுதியிலுள்ள கொட்டாம்பட்டிப் பகுதியில், மலைப் பகுதியைச் சார்ந்த கிராமங்கள் அதிகம் இருக்கின்ற காரணத்தினால், இதுவரை அந்தப் பகுதி மக்கள் இருட்டிலேயே இருந்துகொண்டிருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அந்தப் பகுதியில் ஏழைக் கூலித் தொழிலாளர்கள் அதிகம் வாழ்ந்து வருகின்றார்கள். பகல் நேரங்களிலே வேலைக்குச் சென்றுவிட்டு, இரவு நேரங்களில் கடைகளுக்குச் சாமான் வாங்கப் போனால்கூட அந்தப் பகுதியில் மின்சார வசதி இல்லாத காரணத்தினால், இரவில் அந்தப் பகுதி மக்கள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள். ஏழையெளிய மக்களுக்காக ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிற டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், 110 மெகாவாட் கொண்ட மின் நிலையத்தை இந்த ஆண்டிலே அமைச்சர் அவர்கள் முடித்துக்கொடுப்பாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டே முடித்துக்கொடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 169, திரு. கு. அண்ணாமலை, மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

169—

நியாயவிலைக் கடை

***4768—திரு. கு. அண்ணாமலை:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—